சாட்சிய வாக்கு மூலம்

(அத்தியாயம் 25 பாரதிய நாகரிக் சுரக்ஷா சன்ஹிதா)

1989 ஆண்டு இயற்றப்பட்ட பட்டியல் சாதியினர் மற்றும் பழங்குடியினர்

( வன்கொடுமை தடுப்பு ) சட்டத்தின் கீழான

வழக்குகளை விசாரிப்பதற்கான சிறப்பு நீதிமன்றம் ,

திருவாரூர் - 610 001

தேதி: 16.12.2025

| | | |
|---|---|---|
| சிறப்பு அமர்வு வழக்கு எண். | : | 62/2025 |
| சாட்சியின் வரிசை எண். | : | அ.சா-10 |
| சாட்சியின் பெயர் | : | ராஜ்குமார் |
| தந்தை பெயர் | : | ஜெகநாதன் |
| கிராமம் | : | கும்பகோணம் |
| தாலுக்கா | : | கும்பகோணம் |
| தொழில் | : | உதவி மருத்துவ அலுவலர் |
| வயது | : | 35 |

2025 ம் ஆண்டு டிசம்பர் மாதம் 16 ஆம் நாள் ஆகிய இன்று இந்த நீதிமன்றத்தில் உதவியாளராக பணிபுரியும் திரு. G. சுப்பையன் அவர்களால் இந்த சாட்சிக்கு 1969 ம் ஆண்டு உறுதிமொழி சட்டத்தின் சத்தியபிரமாணம் செய்யப்பட்டு அதன் அடிப்படையில் சாட்சிய வாக்குமூலம் பதிவு செய்யப்படுகிறது.

1 முதல் 5 எதிரிகள் ஆஜர். அரசு வழக்கறிஞர் ஆஜர். எதிரிகள் வழக்கறிஞர் ஆஜரில்லை.

முதல் விசாரணை

நான் மேற்கண்ட முகவரியில் வசித்து வருகிறேன். நான் தற்போது திருவிடைமருதூர் அரசு மருத்துவமனையில் உதவி மருத்துவ அலுவலராக பணிபுரிந்து வருகிறேன். இதற்கு முன்பாக கும்பகோணம் அரசு மருத்துவமனையில் நவம்பர் 2024 முதல் ஜூன் 2025 வரை பணியிலிருந்தபோது

கடந்த 01.01.2025 ஆம் தேதி இரவு 2.35 மணியளவில் நான் அவசர சிகிச்சை பிரிவில் பணி மருத்துவராக இருந்தபோது வலங்கைமான் தாலுக்கா, விடையல் விச்சூர், தெற்கு தெருவை சேர்ந்த அன்பழகன் மகன் அபிக்கண்ணன், சம்பத் மகன் சஞ்சய் ஆகியோர்களை விடையல் கருப்பூர் முருகன் கோவில் அருகே தெரிந்த 5 நபர்கள் கூட்டமாக கட்டையால் தாக்கியதாக சிகிச்சைக்கு வந்தவர்களை அபிக்கண்ணன் என்பவரை பரிசோதித்து விபத்து பதிவேடு பதிவு செய்தேன். அந்த விபத்து பதிவேடு **அ.சா.ஆ-16** ஆக குறியீடு செய்யப்படுகிறது. அவருக்கு இடது தலை பகுதியில் ஒரு வெட்டுக்காயமும், அதன் அருகே ஒரு வீக்க காயமும் காணப்பட்டது. அவரை நான் உள்நோயாளியாக அனுமதித்து சிகிச்சைக்கு பரிந்துரை செய்தேன். அவருக்கு ஏற்பட்ட காயம் சொற்ப காயம் என காய சான்றிதழ் வழங்கினேன். அந்த காய சான்றிதழ் **அ.சா.ஆ 17** ஆக குறியீடு செய்யப்படுகிறது. மேலும் அதே ஊரை சேர்ந்த சம்பத் மகன் சஞ்சய் என்பவரை பரிசோதனை செய்து விபத்து பதிவேடு பதிவு செய்தேன். அந்த விபத்து பதிவேடு **அ.சா.ஆ- 18** ஆக குறியீடு செய்யப்படுகிறது. அவருக்கு தலை உச்சியில் ஒரு வெட்டுக் காயம் இருந்தது. அவரை உள்நோளியாக அனுமதித்து சிகிச்சை செய்து அவருக்கு ஏற்பட்ட காயம் சொற்ப காயம் என காயச் சான்றிதழ் வழங்கினேன். அந்த காயச்சான்றிதழ் **அ.சா.ஆ-19** ஆக குறியீடு செய்யப்படுகிறது. இது சம்மந்தமாக காவல் துணை கண்காணிப்பாளர் என்னை விசாரணை செய்தார்கள் விவரம் சொன்னேன்.

<u>எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை</u>: இல்லை.

சாட்சி சொல்ல சொல்ல என் உத்தரவுப்படி திறந்த நீதிமன்றத்தில் என் முன்னிலையில் தட்டச்சு செய்யப்பட்டு பின் சாட்சியிடம் மேற்படி வாக்குமூலம் படித்துக் காண்பித்த போது சாட்சி சரியென்று என் முன்பாக கையொப்பம்செய்தார்.

VADIVEL M

Digitally signed by VADIVEL M
Date: 2025.12.16 18:28:41 +0530

அமர்வு நீதிபதி,

எஸ்.சி /எஸ்.டி (வன்கொடுமை தடுப்பு )

வழக்குகளை விசாரிப்பதற்கான சிறப்பு

நீதிமன்றம், திருவாரூர்.